**D.V.C. 16 of 2022** **Previous Date : 12.01.2024**

**PW1**

**அருணா க/பெ.பிரகாஷ்**

**07.03.2026**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.03.2026.**

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1. குழந்தை பிறந்த பின்பு நானும், எனது கணவரும் தனிக்குடுத்தனமாக இருந்தோம் என்றால் சரியல்ல, கூட்டுக்குடும்பமாக இருந்தோம். எவ்வளவு நாட்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் குழந்தைக்கு 1 வயது 8 மாதம் ஆகும் வரை கூட்டுக்குடும்பமாக இருந்தோம். அதற்கு பிறகு எப்போது நான் எனது கணவர் வீட்டில் இருந்து வந்தேன் என்றால் குழந்தைக்கு 1 வயது 8 மாதம் இருக்கும்போது தீபாவளி சமயத்தில் வந்தேன். அதற்கு பிறகு நான் என் கணவர் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனக்கும், எனது கணவருக்கும் இடையில் எங்கள் இரு தரப்பு குடும்பத்தினரும் பேச்சு வார்த்தை நடத்தினோமா என்றால் ஆமாம், நடத்தினோம். யார் யார் வைத்து பேச்சு வார்த்தை நடத்தினோம் என்றால் எனது அம்மா, எனது அண்ணன், எனது கணவர் தரப்பில் எனது மாமனார், மாமியார் பேசினோம். இந்த நான்கு பேர் மட்டும் தான் பேசினோமா என்றால் உறவினர்களும் இருந்தார்கள், அவர்கள் யார் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. எனது மனுவில் யார் யார் பேச்சு வார்த்தை நடத்தினோம் என்று மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சரியாக தெரியவில்லை. எனது அக்கா அவரது கணவர் வீட்டில் இருந்து பிரிந்து வந்து என் பெற்றோர் வீட்டில் இருக்கிறார் என்றால் இந்த கேள்விக்கும், இந்த வழக்கில் உள்ள பிரச்சனைகளுக்கும் தொலை தூர அளவில் கூட எந்த சம்மந்தமும் இல்லை என்பதால் இந்திய சாட்சிய சட்டம் 148ன் கீழ் சாட்சி பதில் சொல்ல வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்படுகிறது. நான் சிங்கப்பூர் சென்ற சமயத்தில் எனது கணவர் குழந்தையை பார்க்க எனது வீட்டிற்கு பலமுறை வந்தபோது எனது தாயார் எனது கணவரை அனுமதிக்கவில்லை என்றால் என் கணவர் இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை வரவே இல்லை, இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு என் கணவர் பிரிந்த பிறகு சுமார் 2 வருடம் கழித்து ஒருமுறை வந்தார், என் அம்மா என்னிடம் போன் செய்து கேட்டார் நான் பார்க்க வேண்டாம் என்று மறுத்துவிட்டேன்.**

2. எனது கணவர் பலமுறை குழந்தையை பார்க்க வந்தார் என்றாலும் நான் சிங்கப்பூரில் இருப்பதால் குழந்தையை தன்னுடன் வைத்து கொள்ள வேண்டும் என்று என் கணவர் முயற்சி செய்தார் என்றாலும் நான் தான் அதற்கு மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல, எனக்கு பேசவில்லை. நானும், என் கணவரும் சேர்ந்து இருந்த காலத்தில் என்னையும், குழந்தையையும் நல்ல முறையில் பார்த்து கொண்டார் என்றால் குழந்தை பிறக்கும் முன்பு என்னை பார்த்து கொண்டார், குழந்தை பிறந்த பின்பு எங்களை பார்த்து கொள்ளவில்லை. பெண் குழந்தை பிறந்ததால் என் கணவர் என் கணவர் எங்களை சரியாக பார்க்கவில்லை என்று மனுவில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. தற்போதும் எனது கணவர் மனைவியான என்னுடனும், குழந்தையுடனும் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் எனது குழந்தை பிறந்தவுடனே என்னை மருத்துவமனையிலேயே விட்டு சென்றுவிட்டார், அவர் நான்கு நாட்கள் வரவில்லை, அதற்கு பிறகு அவரை சமாதானப்படுத்தி வரவழைத்தார்கள், ஒரு வருடம் எட்டு மாதம் குழந்தைக்கு வயதாகி இருக்கும் போது கடைசி மூன்று நாட்கள் தண்ணீர், சாப்பாடு எதுவும் கொடுக்காமல் இருந்ததால் தான் நான் அங்கிருந்து போனேன். பெண் குழந்தை என்பதால் என் கணவர் புறக்கணித்தார் என்றும், தண்ணீர், சாப்பாடு எதுவும் கொடுக்காமல் மூன்று நாட்கள் வைத்திருந்தார் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் தான் ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு தன்னிச்சையாக எந்த காரணமுமின்றி என் கணவர் வீட்டில் இருந்து வெளியேறிவிட்டேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் என்னை அடித்து கொடுமைப்படுத்தியதாக மனுவில் சொல்லியுள்ளதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் அப்போது கொடுக்கவில்லை, அதற்கு பிறகு கொடுத்தேன். அவ்வாறு பிறகு புகார் கொடுத்தாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு போக நான் வேறு நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் குழந்தைக்கு சொத்து பாகம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சேர்ந்து வாழ எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் 1ம் எதிர்மனுதாரரை புறக்கணித்து நானாகவே வெளியே வந்துவிட்டேன் என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு பராமரிப்பு கொடுக்க

கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல.

3. நான் 1ம் எதிர்மனுதாரரை புறக்கணித்து ஆடம்பரமாக வாழ வேண்டும் என்றும், சொத்துக்கு ஆசைப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சிங்கப்பூரில் நல்ல முறையில் வேலை செய்து நல்ல சம்பளம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எத்தனை முறை சிங்கப்பூருக்கு சென்று வருகிறேன் என்றால் இந்த வழக்கிற்காக தான் இங்கு வருகிறேன். நான் சிங்கப்பூரில் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் வேலை செய்யவில்லை பெரியம்மாவை பார்த்து கொள்கிறேன். எனது குழந்தையை இங்கு விட்டுவிட்டு பெரியம்மாவை பார்த்து கொள்வதற்கு சிங்கப்பூர் செல்வதற்கு என்ன அவசியம் என்றால் எனது பெரியம்மா தான் பொருளாதார ரீதியாக எனக்கு உதவுகிறார், எனது பெரியம்மாவும், பெரியப்பாவும் வயதானவர்கள். நான் சிங்கப்பூருக்கு எனது பெரியம்மாவை பார்த்து கொள்வதற்கு தான் போகிறேன் என்று மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான், என்னுடைய மனுவிற்கு இந்த சங்கதிக்கும் சம்மந்தம் இல்லை என்று நினைத்து சொல்லவில்லை. நான் சிங்கப்பூர் சென்று வரும் Passport பதிவுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது, எனது தனிப்பட்ட விபரம். நான் சிங்கப்பூரில் வேலை செய்து வருமானம் பெற்று வருவதால் என்னை பராமரிக்கும் நிலையில் உள்ளேன் என்றாலும் அதனால் 1ம் எதிர்மனுதாரர் என்னை பராமரிக்கும் கடமை உடையவல் இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் குழந்தையை தன்னுடன் வைத்து பார்த்து கொள்ள தயாராக இருக்கிறார் என்றால் ஒரு வருடம் கழித்து காரை விபத்து ஏற்படுத்தி குழந்தைக்கு எந்த கவனிப்பு பாதுகாப்பு கொடுக்காமல் எனது கணவர் இருக்கிறார், இந்த வழக்கிற்கு பிறகு தான் என்னையும், குழந்தையையும் பார்ப்பதற்காக வருகிறார். ஒரு வருடம் கழித்து காரை விபத்து ஏற்படுத்தி குழந்தைக்கு எந்த கவனிப்பு பாதுகாப்பு கொடுக்காமல் எனது கணவர் இருக்கிறார், இந்த வழக்கிற்கு பிறகு தான் என்னையும், குழந்தையையும் பார்ப்பதற்காக வருகிறார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் என் கணவர் பார்ப்பதற்காக முன்பே வந்தார் என்றாலும் நான் சிங்கப்பூர் சென்றுவிட்டதால் குழந்தையை தன்னுடன் வைத்து கொள்வதாக என் கணவர் என்னுடன் பலமுறை பேசி கேட்டார் என்றாலும் சரியல்ல, என் கணவர் என்னிடம் ஒரு தடவை கூட பேசவில்லை.

4. என் கணவர் வரதட்சனை கேட்டு, பணம் கேட்டு கொடுமைப்படுத்தினார் என்று காவல் நிலைய புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். எனது வீட்டில் திருமணத்திற்காக கொடுத்த நகை, பணம் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்காக கொடுத்த நகை, பணம் என் வீட்டில் தான் உள்ளது என்றாலும் நான் தான் ஆடம்பரமாக, சுகமாக, சொகுசாக இருக்க வேண்டும் என்று நானாக வந்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. 100 பவுன் நகையும், காருக்காக ரூபாய் 20 லட்சம் பணமும் எனது வீட்டில் இருந்து கொடுத்தார்கள் என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கல்யாண புகைப்படத்தில் நகை அனைத்தும் இருக்கிறது. போட்டோவில் நகை உண்மையான நகையா என்றும், 100 பவுன் எடை உள்ளதா என்றும் தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். நான் எதிர்மனுதாரர் மீது சொன்ன குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என்றாலும் நானாக அவ்வாறான குற்றச்சாட்டுகளை உற்பத்தி செய்து கொண்டேன் என்றாலும் நானாக எனது கணவர் வீட்டில் இருந்து வந்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. 2,3 எதிர்மனுதாரர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சொத்து மற்றும் பணம் வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் 2,3 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் எனக்கு எந்தவிதமான கொடுமைகளையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.07 18:05:57 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.